**கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்திற்கிடையிலான தொடரூந்துப் பிரயாணம் மேலும் சௌகரியமானதாக வருகின்றது: இந்திய சலுகையடிப்படையிலான நிதியுதவியின் கீழ் மாகோவிலிருந்து ஓமந்தை வரையிலான சுமார் 130 கி.மீ நீளத் தொடரூந்துப்பாதை மேம்படுத்தப்பட்டு சீரமைக்கப்படவுள்ளது.**

**இத்தொடரூந்துப் பாதையின் மேம்படுத்தல் நூறு வருடங்களில் முதல் தடவையாக இடம்பெறுகிறது**

இந்திய சலுகையடிப்படையிலான நிதியுதவியின் கீழ் மாகோவிலிருந்து ஓமந்தை வரைக்குமான தொடரூந்துப்பாதை மேம்படுத்தப்பட்டு சீரமைக்கப்படுவதற்காக சுமார் 91.26 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான ஓர் ஒப்பந்தம் இர்கோன் சர்வதேச லிமிட்டட் (IRCON International Limited) நிறுவனம் மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் 18 ஜூலை,2019 அன்று கைச்சாத்திடப்பட்டது. இவ்வொப்பந்தம், இர்கோன் சர்வதேச லிமிட்டட் நிறுவனத்தின், தலைவரும் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளருமான திரு. சுனில் குமார் சௌத்திரி மற்றும் திரு . எல்.பி. ஜயம்பதி, செயலாளர், இலங்கைப் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு ஆகியோரினால் இலங்கைப் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் , கௌரவ அர்ஜூன ரணதுங்க அவர்களின் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டது . திரு. எம்.ஜே.டி.பெர்ணான்டோ, பொது முகாமையாளர், இலங்கைத் தொடரூந்து சேவைகள் ,திரு. எஸ்.எல். குப்தா, நிறைவேற்றுப் பணிப்பாளர், இர்கோன் சர்வதேச லிமிட்டட், திருமதி. சுஜா கே. மேனன், பொருளாதாரம் மற்றும் வர்த்தகப் பிரிவுத் தலைவர் , இந்திய உயர் ஸ்தானிகராலயம் ஆகியோரும் இதன் போது பிரசன்னமாகியிருந்தனர்.

இந்திய சலுகையடிப்படையிலான நிதியுதவியின் கீழ் மாகோவிலிருந்து ஓமந்தை வரை மேம்படுத்தப்படவுள்ள தொடரூந்துப் பாதையின் மொத்த நீளம் சுமார் 129 கி.மீ ஆகும். இது,12 தொடரூந்து கடவை நிலையங்கள்,7 தரிப்பு நிலையங்கள் மற்றும் 78 வீதிக் கடவைகள் என்பவற்றை உள்ளக்கியுள்ளது. இச்செயல்திட்டம் தொடரூந்துப் பாதையின் தற்போதைய வேகமான மணிக்கு 60 கி.மீ இலிருந்து 120 கி. மீ என இரட்டிப்பு வேகம் அடைவதற்கான சாத்தியத்தைக் கொண்டிருப்பதோடு , பராமரிப்புச் செலவுகளையும் குறைக்கிறது. அது பிரயாணிகளின் சௌகரியத்தையும் மேம்படுத்துவதுடன் , இலங்கை தொடரூந்துச் சேவைகளின் நவீனமயப்படுத்தலுக்கு மேலும் பங்களிக்கின்றது.

இலங்கையில் தொடரூந்துச் சேவைத் துறையின் அபிவிருத்திக்காக இந்தியா 1.3 பில்லியன் அமெரிக்க டொடலர்கள் பெறுமதியான கடன் வசதிகளுக்காக இது வரை பற்றுறுதி அளித்துள்ளது. தசாப்த கால மோதல்களினன் பின் வடக்கு மற்றும் தெற்கை இணைக்கும், தொடரூந்துப் பாதைத் தொகுதியின் மீள்சீராக்கல் ,இந்திய சலுகையடிப்படையிலான நிதியுதவியின் கீழ் பொறுப்பேற்கப்பட்டது . சுனாமியால் பாதிக்கப்பட்ட தென்பகுதித் தொடரூந்துப் பாதைகளும் இந்தியக் கடன் தொகுதியின் கீழ் மேம்படுத்தப்பட்டது . இந்தியா இது வரை இலங்கையில் சுமார் 300 கி.மீ நீளத் தொடரூந்துப் பாதைகளை மேம்படுத்தியுள்ளதுடன் சுமார் 330 கி.மீ நீளத்திற்கு நவீன சமிக்கைகள் மற்றும் தொலைத்தொடர்பு முறைமையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

ஜூன் 2017 இல், இலங்கையில் தொடரூந்துச் சேவைத் துறையின் அபிவிருத்திக்காக 318 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான ஒரு புதிய கடன் வசதிக்கும் இந்தியா கைச்சாத்திட்டுள்ளது. இந்தக் கடன் தொகுதியின் கீழ், முன்னெடுக்கப்பட்டுள்ள ஏனைய செயல் திட்டங்கள்,160 பயணிப் பெட்டிகளின் கொள்வனவு ; மாகோவிலிருந்து அநுராதபுரம் வரை சமிக்கைகள் மற்றும் தொலைத்தொடர்பு முறைமையின் மேம்படுத்துதல் ; மற்றும் இரத்மலானையில் தொடரூந்து திருத்தியமைக்கும் பட்டறையின் ஸ்தாபித்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றன. இந்தியாவிலிருந்து கொள்வனவு செய்யப்படவுள்ள தொடரூந்துத் தொகுதிகள் டீசல் பல்லியந்திர அலகுகள் 6, தொடரூந்து என்ஜின்கள் 10, கொள்கலன் தாங்கி வண்டிகள் 20, எரிபொருள் தாங்கி வண்டிகள் 30, பயணிப் பெட்டிகள் 160 மற்றும் 500 பேரூந்துகள் என்பவற்றை உள்ளடக்கியதாக உள்ளது . இலங்கைத் தொடரூந்துச் சேவைப் பணியாளர்களின் செயற்றினைக் கட்டியெழுப்புவதற்கும் இந்தியா கணிசமான வகையில் பங்களித்துள்ளது.

இந்தச் செயல்திட்டம் , இலங்கையில் மக்கள் நல இணைப்புச் செயல்திட்டங்களில் இலங்கையுடன் பங்குடமை வகிக்கும் இந்தியாவின் முயற்சிகளின் ஒரு தொடர்ச்சியாக அமைகின்றது.

* * * * *

Colombo
18 July, 2019